# ஈரோடு மாவட்ட நாட்டுப்புற பாடல்களில் விளையாட்டுப்பாடல் ஓர் ஆய்வு

24

**பெ.ரேவதி**

**தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி**

**ஈரோடு -2**

**முன்னுரை :-**

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை பற்றி ஆராய்வதே நாட்டுப்புறவியல் எனலாம். வாழ்வியல் என்பது மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு,நம்பிக்கை ,இலக்கியம் என்று வகைப்படுத்தலாம்.நாட்டுப்புற மக்களின் கலைகளையும்,இலக்கியங்களையும் பற்றி அறிந்து கொள்வதனை நமது முன்னோர்களின் கூட்டுப் படைப்பு என்றும் கூறுவர். இலக்கியங்கள் தோன்றி வளர்வதற்கு முன்பு நமது ஊர்களில் ஏட்டில் எழுதாத இலக்கியங்களாக இருந்தவை நாட்டார் பாடல்கள் தான். அவை தமிழர் வாழ்வியலின் முன்னோடிகள் .ஒரு காலத்தில் நமது முன்னோர்கள் பதித்த காலடிச் சுவடுகள்;அவர்களின் சுவாசங்கள்,அவர்களின் வாசனைகள் அவை பாரதி பாடிய

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
யிருந்து மிந்நாடே -அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே -அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே -இதை
வந்தனை கூறி மனதி லிருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ "

என்பதை நினைவுப்படுத்தும் .இப்படி நாட்டுப்புறப் பாடல்கள்

"இனிக்க அளிக்க இன்பந்தரும்
செவிநுகர் கனிகள்
இதயத்தை ஈரப்படுத்தும்
அன்பின் பிரிவுகள்
குதித்துக் குதித்து துள்ளியோடும்
அருவியின் இன்னிசைகள்
கேட்கக் கேட்க புளிக்காத"
தேந்தமிழ் பாடல்கள்

அத்தைகய பாடல்கள் நான்கு புறங்களுக்கும் ,திசைகள் இருப்பது போல் ஒவ்வொரு இனத்திற்குள்ளும் தனித்த குணங்கள் உண்டு .அவ்வாறிருப்பது இயற்கை தானே

.அவற்றில் தானே தனித்த பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள்,சடங்குகள்,கலைகள்,சமயங்கள் போன்ற அனைத்தும் கலந்தும் கரைந்தும் உள்ளன.

**நாட்டுப்புற விளையாட்டுகளும் வாழ்வியலும் :-**

பண்டைத் தமிழ்ச் சமூகம் நாட்டுப்புற விளையாட்டுகளை அதிகமாக் கொண்டது.நாட்டுப்புற விளையாட்டுகள் வழியாகத் தான் தமிழனின் பண்பாட்டு வரலாற்றை முழுமையாக உய்த்துணர இயலும்.காலம்காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த விளையாட்டுகள் ஒவ்வொரு சமூகத்திலும் இயல்பாக அமைந்துள்ளது .

விளையாட்டால் ஒருவருக்கு உடலுரம்,உள்ளக்கிளர்ச்சி,மறப்பண்பு, மதிவன்மை ,கூட்டுறவுத்திறம்,வாழ்நாள் நீடிப்பு முதலியன உண்டாகின்றன என்கிறார் பாவாணர்.

தமிழ்ப்பண்பாடு சார்ந்து கிராமிய விளையாட்டுகளுக்கும் உலகளாவிய விளையாட்டுகளுக்கு உள்ள நெருக்கம் குறித்து இவ்ஆய்வு பேசுகிறது.கிராமங்களில் விளையாட்டுகள் அழிந்து வருவதால் நம் சமூகம் தற்போது எந்த விதத்திலேனும் பண்பாட்டுப் பாதிப்புகள் நிகழ்ந்துள்ளனவா அல்லது தமிழ்ப் பண்பாடு என்பது தொன்மை மிக்கது. எனவே இப்பண்பாடு சார்ந்த விளையாட்டுகளிலும் தொன்மை கூறுகள் சற்று மிகுதியாகவே உள்ளன என்பதை இவ்வாய்வில் விளக்கப்படும் .

விளையாட்டு என்பது அனுபவித்து மகிழ்வது. ஆனால் இன்று கேட்டு மகிழ்வதாகவும் பார்த்து மகிழ்வதாகவும் பாதை மாறி இருக்கிறது.விளையாட்டுகளால் உடலுக்கும் அறிவுக்கும் பயன் கிடைக்கிறது.விளையாட்டுகள் பாடலோடும் பாடல் இன்றியும் அமைவதுண்டு .

கிராமிய விளையாட்டுகள் இயற்கையோடு இயைவன.வீரம்,உறுதி,ஊக்கம்,உழைப்பு,நட்பு,இரக்கம்,நேர்மை, அறம் என்னும் உயர்ந்த பண்புகள் மனிதர் உள்ளங்களில் கிராமிய விளையாட்டுகள் வழியாகவே வளர்க்கப்பட்டன .மேலும் விளையாட்டுகளால் கட்டுப்பாடு,ஒற்றுமையுணர்வு ,பொதுநலப் பண்பு தலைமைப்பண்பு, ஆளுமை,மன்னிக்கும் குணம்,இரக்க உணர்வு,வீட்டுக் கொடுக்கும் தன்மைகள் போன்றவை வளர்கின்றன.

**வாழ்வைப் பிரதிபலிக்கும் விளையாட்டுகள் :-**

குழந்தைகள் பெற்றோரின் முகச்சாயலோடு மட்டுமல்ல;அவர்களின் வாழ்வியல் முறைகளோடும் தான் வாழ்க்கைப் பாதையில் பயணிக்கின்றன . இவை முதலில் விளையாட்டுகளாகத் துவங்கி பின் நிஜ வாழ்க்கையின் சீலங்களாக மலர்கின்றன.

உதாரணமாக 'கை வீசம்மா கை வீசு ','சாஞ்சடம்மா சாஞ்சாடு','நண்டூருது நரியூருது கிச்சு கிச்சு ' போன்ற பாடல்களை பாடும் போதும் ,சில செய்கைகளை காண்பிக்கும் போதும் குழந்தைகள் கைகளை வீசுவதையும் ,உடலை அசைப்பதையும்,கைகளைத் தட்டுவதையும்,குலுங்கி குலுங்கிச் சிரிப்பதையும் பார்க்கலாம். குழந்தைகள் தன் உடலின் பாகங்களை அறிந்து கொள்வதற்கு விளையாட்டுகள் மூலம் பயிற்சி பெறுகின்றது.

**வெந்துதா வேகலையா :-**

இவ்விளையாட்டிற்கு சிறுவர்கள் மற்றும் பெண்கள் எத்தனை பேர் வேண்டுமானாலும் கலந்து

கொள்ளலாம்.என்றில்லாமல் வாழ்வியலாக அமர்ந்த நிலையில் விளையாடும் விளையாட்டு.

அனைவரும் வட்டமாக அமர்ந்து கொண்டு,தங்களது இரண்டு கைகளின் விரல் நுனிகளை மட்டும் தரையில் வைத்து உள்ளங்கையை மட்டும் உயர்த்துப் பிடித்தவாறு வைத்துக் கொள்வர்.விளையாட்டின் தலைவர் மட்டும் கீழ்க்கண்ட பாடலைப் பாடி ஒவ்வொருவரின் கையையும் தொட்டுக் கேள்விகளைக் கேட்பார் .

[1]"மாடு மாடு எங்கப் போற?
புல்லு திங்க போறேன்
புல்லு எங்க?
காட்டுக்குள்ள காட்டுக்குள்ள காலை வெச்ச
கல்லெடுத்து வீசுவேன்
ராஜாகிட்ட சொல்லுவேன்
சரி படுத்துக்கோ படுத்துக்கோ படுத்துக்கோ " [1]

என்று பாடல் படுபவர் கூறியதும் இவ்விளையாட்டு வீட்டில் அம்மா தோசை சுட்டுக் கொடுத்து குழந்தைகளுக்கு ஊட்டுவதை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வாழ்வியல் விளையாட்டு ஆகும்.

**அறநெறி கூறும் விளையாட்டுகள்:-**

வழி காட்டப்படாத ஆறு காட்டாறு.அது பயனற்றது மட்டுமல்ல ஆபத்தானது ஆகும். வழிகாட்டி நெறிப்படுத்திய ஆறு விளைநிலங்களுக்கும் மக்களின் குடிநீருக்கும் பயன்படுகிறது.அதுபோல் அறநெறிகள் மூலம் வழிகாட்டபட்ட மனிதன் தனக்கும் தன் தலைமுறைக்கும் நற்பெயரைச் சம்பாதிப்பவனாய் இருப்பான்.

**பூப்பறிக்க வருகிறோம்;-**

"பூப்பறிக்க வருகிறோம்"என்ற விளையாட்டைச் சிறுமியர் இரு அணிகளாய் பிரிந்து கொள்வர் .இரு அணிகளுக்கும் அணித் தலைவராக இருவர் செயற்படுவார்.ஒரு அணித் தலைவி தனது அணியிலுள்ள ஒவ்வொரு பெயரை இரகசியமாகச் சொல்லுவார்.இரு அணியிலுள்ள பெண்களும் எதிர் எதிர் நோக்கி வரிசையாக நின்று கொள்வர். இரு அணிகளும் கைகளை கோர்த்த படி முன்னும் பின்னும் ஆடி வருவர்

[2]"பூப்பறிக்க வருகிறோம்
பூப்பறிக்க வருகிறோம்'
எந்த மாசம் வருகிறீர்
எந்த மாசம் வருகிறீர்"
இந்த மாசம் வருகிறோம்
இந்த மாசம் வருகிறோம்
எந்தப் பூவைப் பறிக்கிறீர்
எந்தப் பூவைப் பறிக்கிறீர்
மல்லிகைப் பூவைப் பறிக்கிறேன்

மல்லிகைப் பூவைப் பறிக்கிறேன்" 2

என்று பாடுவர்.இவ்விளையாட்டுகளில் தனது குழுவினருடன் வீட்டுக் கொடுத்துச் செயற்படும் பண்பு ,தனது இனத்தவரைப் பாதுகாப்பது,எதிர் அணியினருடன் போட்டிபோடும் பண்பு இவைகளை ஒரே சமயத்தில் வலியுறுத்துகின்றன என்பது குறிப்பிடத்தாகும்.

**அறிவுத்திறமை வளர்க்கும் விளையாட்டுகள் ;-**

மனிதனை விலங்குகளிருந்து மாற்றிக் காட்டுவது அவன் பெற்றிருக்கும் ஆறாவதுஅறிவு.மனிதன் செய்யும் பெரும்பாலான செயல்களை ரோபோக்களே இன்று செய்து விடுகின்றன.ரோபோக்களால் மனிதனை வெற்றி கொள்ள முடியாததற்கு பகுத்தறிவுதான் காரணம்.அத்தைகய நுண்ணிய அறிவே மனிதனை உலகுவாழ் உயிரங்களின் தலைமைப் பீடத்திற்கு அழைத்து சென்றுள்ளது.

எதையும்,எவர் சொல்வதற்கும் கிளிகளைப்போல் தலையை ஆட்டாமல் உண்மையை தீர ஆராய்வதும்,ஒரு சேவலின் விளையு குறித்து முன் கூட்டியே சிந்திப்பதும் தன அறிவுடைமை ஆகும்.

**குலைகுலையா முந்திரிக்கா:-**

"குலைகுலையா முந்திரிக்கா"என்ற விளையாட்டில் சிறுவர் சிறுமியர் அனைவரும் வட்டமாக அமர்ந்து கொள்வர்.பெரும்பாலும் சிறுமியரரே இவ்விளையாட்டை விளையாடுகின்றனர்.

ஒரு சிறுமி மட்டும் தனது கையில் ஒரு சிறு துணியை (குலையை)மறைத்து வைத்தவாறு

3"குலை குலையா முந்திரிக்கா

நரியே நரியே சுற்றிவா

கொள்ளையடுச்சவன் எங்கிருக்கான்

கூட்டத்திலிருப்பான் கண்டுபிடி"3

இப்பாடலைப் பாடி ஓரிரு முறை சுற்றி வரும் சிறுமி தனது கையில் மறைத்து வைத்திருக்கும் துணியை மற்றொரு சிறுமியின் பின்புறத்தில் மெல்ல நழுவ விடுவாள்.அதைப் புரிந்து கொண்டு மற்றொரு சிறுமி வட்டத்திலிருந்து ஓடும் சிறுமி அவரை பிடிக்க முடியாத சிறுமியும் தற்பொழுது"குலைகுலையா முந்திரிக்கா"என்று கூவி கொண்டே சுற்றி வர வேண்டும்.இவ்விளையாட்டு குழந்தைகளிடையே ஒரு குழு உணர்வையும்,ஒற்றுமையையும் உருவாக்குகிறது.

**பொழுதுபோக்கு விளையாட்டுகள் :-**

சோம்பி இறுத்தல் நோயை உண்டாக்கும்.இதிலிருந்து விடுபட சிறு விளையாட்டுகளை விளையாட வேண்டும்.சங்க காலம் முதலே பொழுதுபோக்கு விளையாட்டுகள் ஏராளம் இருந்துள்ளன.அரச குலப்பெண்கள்,கர்பிணிப்பெண்கள்,முதிய வயதினர்,குழந்தைகள் வீட்டிற்க்குள்ளேயே இவ்விளையாட்டுகளை விளையாடியதாக வரலாறு உள்ளது.

பெரும்பாலும் பொழுதுபோக்கு விளையாட்டுகளில் வயது பேதமின்றி கலந்து கொண்டனர்.சிறுவர் விளையாட்டுகளைப் பெரியவர்கள் விளையாடுவதையும் குறிப்பாக தாத்தா பாட்டிமார்கள் சிறுவர்களோடு சிறுவர்களாக விளையாடியதையும் கண்டிருக்கிறேன்.இவ்விளையாட்டுகளில் குறிக்கோள் மனமகிழ்ச்சி தான் .அதனால் பெரும்பாலும் இவ்விளையாட்டுகள் சிரிப்பலையை ஏற்படுத்துவதாகவே அமைந்திருக்கும்.

**கூனிகூனி:-**

இது ஒரு குழந்தை விளையாட்டு.ஒரு குழந்தை ஒரு பாட்டி போன்று முதுகை வளைத்தபடி குனிந்து ஒரு குச்சியின் உதவியால் நடப்பாள்.அவள் எதையோ தேடுவாள்.அப்போது மற்ற குழந்தைகள் எல்லாம் ஓடி வந்து பாட்டியிடம் கேள்வி கேட்பார்கள்.

[4]"பாட்டி பாட்டி என்ன தேடுற ?

'ஊசி தேடுறேன் '

ஊசி எதுக்கு?

'பை தைக்க'

பை எதுக்கு ?

'பணம் போட'

பணம் எதுக்கு?

'கத்தி வாங்க'

கத்தி எதுக்கு?

'உங்கயெல்லாம் வெட்ட' "[4]

எனப் பாட்டியாய் மாறியிருக்கும் குழந்தை சொல்ல மாற்றக் குழந்தைகள் ஓடிவிடும்.கிழவி விரட்டிப் போய் தொடுவாள்.பின் தொடப்பட்ட குழந்தை கிழவியாக மாற விளையாட்டு தொடரும்.

**ஆய்வு முடிவுகள்:-**

தமிழகத்தில் பெரும்பாலான கிராம பகுதிகளில் முப்பது வயதிலிருந்து தொண்ணூறு வயது வரையுள்ள ஆண் பெண் இருபாலரையும் சந்தித்து செய்து கள ஆய்வு தந்த தகவல்களின் முடிவுகளே இவையாகும்.

கிராம விளையாட்டுகள் அத்தனையும் தான் என்ற உணர்வு இல்லாது நாம் என்னும் உணர்வு எய்தி உயருள்ளம் கொள்ளச் செய்கின்றன

குழு விளையாட்டுகள் கடமையை நன்கு செயல்படுத்தி ஒழுக்கமுடன் இருக்கவும் ,குழு உறவு ,தலைமைப் பண்பு ,விட்டு கொடுத்தல் ,தோல்வியில் துவளாமை போன்றவற்றில் வளரவும் உதவுகின்றன.வாழ்க்கையில் பிடிப்பும் ,நம்பிக்கையும் பிறரோடு பழகும் பக்குவமும் வாழ்வின் இறுக்கங்களிலிருந்து விடுதலையை கிராமிய விளையாட்டுகள் தருகின்றன.

விளையாட்டுகளில் மக்களின் அன்றைய இன்றைய கலாச்சாரம்,பண்பாடு,அரசியல் வாழ்வு,பொருளாதாரத் தன்மை ,சமூக ஏற்ற தாழ்வுகள்,சடங்குகள் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது.

**பின்னிணைப்புகள் :-**

**முதன்மைத் தரவுகள் தகவலாளர்கள் :-**

**1.**திருமதி .வசந்தா வயது **53.**பெரியமோளபாளையம்.

**2.**திரு. நல்லான் வயது **70.** காமராஜ் நகர்.

**3.**திரு.ஆறுமுகம் வயது **62.** பிரம்மதேசம்

**4.**திருமதி.பெரமாயி வயது **55.** நகலூர்

**இரண்டாம் நிலைத்  தரவுகள் - நூல்கள்  :-**

**1.**முனைவர்  வெ நாகரத்தினம் ,
கோவை நாட்டுப்புற பாடல்கள் ,
விஜயாபதிப்பகம் ,
கோவை,

**2.**முனைவர்  செ இளையராஜா ,
அமைப்பியல் ஆய்வில் நாட்டுப்புற விளையாட்டுகள் ,
காவ்யா பதிப்பகம் ,
சென்னை,

**3.**தொகுப்பாசிரியர் நா வானமாமலை,
தமிழர் நாட்டுப்புற பாடல்கள் ,
பாவை பிரின்டர்ஸ் (பி )லிட் ,
சென்னை,

**4.**குமரி ஆதவன் ,
தமிழக கிராமிய விளையாட்டுகள் ,
நியூ சென்சரிக் புக் ஹவுஸ் (பி )லிட் ,
சென்னை,